## <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண். 23/2022</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **10.06.2026** |
| **பெயர்** | **தாஸ்** |
| **த/பெ** | **மாசிலாமணி** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம் – 11.40.a.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

8. எங்களுக்கு தான் வழி உரிமை உள்ளது என்பதை காண்பிக்க இந்நீதிமன்றத்தில் எங்கள் தரப்பில் ஏதேனும் ஆவணங்கள் தா்ககல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு ஆவணம் இல்லாத போதும் வழியை நாங்கள் பயன்படுத்தி வருவதை காண்பிக்க வருவாய் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. கிராமநத்த சொத்துக்களை பொறுத்தவரையில் யார் அனுபவித்து வந்தார்களோ அவர்களின் பெயரிலேயே பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது போல் நாங்கள் அனுபவித்து வந்ததாக கூறும்பட்சத்தில் என் பெயரிலோ அல்லது என் தந்தை பெயரிலோ பட்டா வழங்கப்பட்டதா என்றால் என்னுடைய பெரியம்மாவான சரோஜம்மாள் பெயரில் வழங்கப்பட்டது.

9. சரோஜம்மாள் பெயரில் உள்ள பட்டாவை இந்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளோமா என்றால் தாக்கல்செய்யவில்லை. அப்படியே இருந்தாலும் சொத்துக்களுக்கு சரோஜம்மாள் தான் உரிமையாளர் என்றால் எங்களுடைய சொந்தம் தான் அவர் அதனால் வீடு கட்டி இருந்து வந்தோம் 2020–ல் தான் பத்திரம் செய்தோம். 2020ல் யார் யார் பெயருக்கு பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் பங்கஜம்மாளுக்கு, சரோஜம்மாள் பத்திரம் எழுதி கொடுத்தார். பங்கஜம்மாள் என் தாயார். 2020–ல் கிரையப்பத்திரத்தில் பொது வழி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாதி பணம் கொடுத்து சொத்தினை கிரையம் பெற்று அந்த சொத்தில் நாங்கள் வழி உரிமை கோரி தகராறு செய்ததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல வாதி அவருடைய பத்திரத்தில் பாட்டை என்று அவரே குறிப்பிட்டு ஏற்படுத்திவிட்டார்.

10. வழக்கு சொததை பொறுத்தமட்டில் வாதி முறையான கிரையப்பத்திரம் வாங்கியுள்ளார் என்றும் அதன் அடிப்படையில் வாதியின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவே அந்த சொத்தில் நாங்கள் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. வாதி கிரையம் பெற்ற பத்திரத்திலோ, புல வரைபடத்திலோ அல்லது அவர் பெயருக்கு வழஙக்கப்பட்ட பட்டாவிலோ எங்கும் வழி பாட்டை குறித்த குறிப்பிடவில்லை என்றும் ஆனால் நாங்கள் அப்படி ஒரு வழி பாட்டை உள்ளதாக கூறி உரிமை கோருகிறோம் என்றால் வழிபாட்டை காண்பிக்க எங்கள் தரப்பில் ஆவணம் தாக்கல் செய்துள்ளோம். எந்த காலகட்டத்திலும் வாதியோ, அவரின் தந்தையோ வழிபாட்டை குறிதது எந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் அவ்வாறு ஆவணம் கொடுத்திருந்தால் இந்நீதிமன்றத்தில் அதனை எங்கள் தரப்பில் சான்றாவணமாக கொடுத்திருப்போம் என்றால் வாதியின் தந்தை எழுதிய ஆவணத்தை எங்கள் தரப்பில் சான்றாவணமாக கொடுத்துள்ளோம்.

11. கிராமத்தில் எங்களுடைய குடும்ப உறுப்பினர்கள் அதிகமாக உள்ள காரணத்தினால் போதிய இடவசதி இல்லாததால் வாதியிடம் இருந்து சொத்தினை கோருகிறோம் என்றால் சரியல்ல. எனது நிரூபணவாக்குமூலத்தில் 19ம் பத்தியில், 2007–ல் வாதி போலியாக அவணம் தயார் செய்து கொண்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால்எ 2007 ஆவணம் போலியானது அல்ல அதில் குறிப்பிட்டுள்ள வழிபாட்டை மட்டும் தான் வாதி தாமாகவே எழுதிக்கொண்டது. உண்மையில் வாதியின் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் போலியானதாக இருந்திருந்தால் அதனை எதிர்த்து ஏதேனும் சட்டநடவடிக்கை எடுத்திருப்போம் என்றால் அந்த பத்திரம் குறித்து எங்களுக்கு தெரியாது. அந்த பத்திரம் குறித்து 2017–ல் தான் தெரியவந்தது. சாட்சி தற்போது மாற்றி இவ்வழக்கின் வாதி சரோஜம்மாள் மற்றும் பாரியின் மீது வழக்கை தொடுத்த போது தான் வழிபாட்டை குறித்து தெரியவந்தது என்று கூறினார்.

12. பொது வழி குறித்து வாதி கிரையப்பத்திரம் ஏற்படுத்தியது செல்லாது என்று ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றால் எடுக்கவில்லை. உண்மையில் எங்களுடைய வழி உரிமை தடை செய்யப்பட்டு இருந்தால் அதனை மீட்க வழக்கு தாக்கல் செய்திருப்போம் என்றால் இந்த பிரச்சனை குறித்து ஆர்.டி.ஒ–வில் ஆஜர் ஆனோம். வருவாய் துறை மூலமாக பொது வழி குறித்து இந்நாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் தாசில்தாரிடம் வழியினை குறித்து ஏற்கனவே மனு செய்துள்ளோம். நாங்கள் கொடுத்த மனுவின் அடிப்படையில் வருவாய் துறை அலுவலர்கள் கள ஆய்வு செய்து ஆவணங்களை பரிசீலினை செய்த பிறகு வழி குறித்து எந்த உரிமையும் எங்களுக்கு மீட்டு கொடுக்க முடியாது என்றும் அது பட்டா நிலம் என்றும் உத்தரவிடப்பட்டது என்றால் சரியல்ல. மேற்சொன்ன நான் கூறும்

உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை என்றால் வாய்மொழியாக கூறினார். என்னுடைய பதிலுரையிலும், பிரமாமணவாக்குமூலத்திலும் குடும்ப உறவுகள் குறித்து குறிப்பிட்டுள்ள சங்கதிகள் இவ்வழக்கிற்கு தொடர்புடையது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்தமட்டில் வாதிக்கு கிரையப்பத்திரம் மூலம் கிடைக்கப்பெற்ற உரிமையை எங்களால் கோர இயலாது எனவே வாதி கோரியபடி இவ்வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பரிகாரத்திற்கும் நீதிமன்ற கட்டணம் செலுத்த தேவையில்லை என்றும் அனைத்திற்கும் சேர்த்து ஒரே நீதிமன்ற கட்டணம் செலுத்தினால் போதும் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி இவ்வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்.12.11.p.m.**